SIR- ரத்து – வாக்குச்சீட்டு முறை: இரு கோரிக்கைகளை வலியுறுத்தி

குடியரசுத் தலைவரிடம் கழக எம்.பி.க்கள் மனு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!

சென்னை, அக்.18–

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :–

வாக்குரிமையைப் பறிக்கும் SIR வேண்டாம்! மீண்டும் வாக்குச்சீட்டு முறையே வேண்டும்!

இன்று நடைபெற்ற தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் முக்கியத் தீர்மானங்கள்!

- SIRஐ முழுமையாக ரத்து செய்க!
- தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரைப் பதவிநீக்கம் செய்து விசாரித்திடுக!
- ஜனநாயகத்திற்காகப் போராடும் மாணவர் இயக்கங்களுக்கு முழு ஆதரவு!
- EVMக்கு மாற்றாக மீண்டும் வாக்குச்சீட்டு முறையைக் கொண்டுவருக!



SIR விவகாரத்தில் மாநிலத்துக்கு மாநிலம் மாறும் காங்கிரசின் நிலைப்பாட்டுக்கும், த.வெ.க.வின் மவுனத்துக்கும் கடும் கண்டனம்!

மக்களின் வாக்குரிமையையும் இந்திய ஜனநாயகத்தையும் பாதுகாக்க, #SIR ரத்து மற்றும் வாக்குச்சீட்டு முறை ஆகிய இரு கோரிக்கைகளை வலியுறுத்தி குடியரசுத் தலைவரிடம் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனு அளிப்பார்கள்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இசையமைப்பாளர் தேவாவின் தேனிசை

என்றென்றும் மக்கள் மனதில் நிலைத்திருக்கும்!

மறைவுக்கு – எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.18–

'தேனிசைத் தென்றல்' தேவா அவர்களின் மறைவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

தமிழ்த்திரையுலகின் முன்னணி இசை அமைப்பாளராகத் திகழ்ந்த தேனிசைத் தென்றல் தேவா அவர்கள் உடல்நலக்குறைவால் மரணமடைந்த செய்தி கேட்டு வருந்தினோம்.

கழகத்தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன், தேவா அவர்களின் இல்லம் சென்று மறைந்த அவரது திருவுடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம்.

சகோதரர் ஸ்ரீகாந்த் தேவா உட்பட அவருடைய குடும்பத்தாருக்கு ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்தோம்.

இசை அமைப்பாளராக மட்டுமின்றி பாடகர், பாடலாசிரியர் என்று பல்வேறு துறைகளில் சாதித்தவர் தேவா அவர்கள்.



சென்னையின் கானா பாடல்களுக்கு உலக அளவிலான முகவரியைத் தந்த தேவா அவர்களின் தேனிசை என்றும் மக்கள் மனதில் நிலைத்திருக்கும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கூடுதல் ரயில் - பயணிகள் வசதிகளை நிரந்தரமாக்க நடவடிக்கை மேற்கொள்வீர்!

தயாநிதி மாறன் எம்.பி. கோரிக்கை!

சென்னை, அக். 18–

தமிழ்நாட்டில் திருச்சி, மதுரை, கோவை, நெல்லை உள்ளிட்ட முக்கியமான வழித்தடங்களில் கூடுதல் ரயில் சேவைகள் தொடர்பாக, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் எம்.பி., ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு பலமுறை கடிதம் வாயிலாக வலியுறுத்திருந்த நிலையில் எதிர்வரும் ஆயுத பூஜை உள்ளிட்ட பண்டிகை கால விடுமுறைகளுக்காக 5 சிறப்பு ரயில்களை தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. அதன்படி சென்னை சென்ட்ரல் – போத்தனூர், தாம்பரம் – செங்கோட்டை, ஈரோடு – திருநெல்வேலி, திருநெல்வேலி – தாம்பரம், சென்னை சென்ட்ரல் – கொல்லம் ஆகிய மார்க்கங்களில் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன. எனினும் மற்ற பண்டிகை மற்றும் நீண்ட விடுமுறை நாட்கள், வார இறுதி நாட்களில் போதிய ரயில்கள் இல்லாதிருக்கும் குறைகளை தீர்க்கும் வண்ணம், கூடுதல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கழகநாடாளுமன்றகுழுத்துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.தயாநிதி மாறன் வலியுறுத்தியுள்ளார்.



இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு : –

தமிழ்நாட்டில் முக்கிய வழித்தடங்களில் கூடுதல் ரயில்களை இயக்குவதுடன், கூடுதல் ரயில் பெட்டிகளையும் இணைக்கவேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி நான் தொடர்ந்து வலியுறுத்திவந்த நிலையில், எதிர்வரும் ஆயுத பூஜை உள்ளிட்ட விழாக்கால விடுமுறைக்காக 5 சிறப்பு ரயில்கள் அறிவிக்கப்பட்டுள்ளது வரவேற்கத் தக்கது.

எனினும் வரவிருக்கும் விடுமுறைக் காலங்களுக்கும் சென்னை மற்றும் தமிழ்நாட்டின் முக்கிய வழித்தடங்களில் மேலும் கூடுதல் ரயில்கள் இயக்கப்பட வேண்டும். அதேசமயம், அனைத்து வழக்கமான ரயில்களிலும் குறைந்தது பத்து கூடுதல் பெட்டிகள் இணைக்கப்பட வேண்டும். குறிப்பாக, முன்பதிவு இல்லாத பெட்டிகளில் ஏற்படும் கடுமையான நெரிசல், பயணிகள் பாதுகாப்பு, பெண்கள், முதியவர்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்படும் சிரமம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கூடுதல் பெட்டிகள் உடனடியாக இணைக்கப்பட வேண்டும். விடுமுறைக் காலங்களில் மட்டுமின்றி, ஆண்டு முழுவதும் பயணிகளின் வசதியை உறுதி செய்யும் வகையில் ரயில் சேவைகளை மேம்படுத்த வேண்டும். ரயில்வே அமைச்சகம் தற்போதைய விடுமுறைக்காக சிறப்பு ரயில்களை அறிவித்திருப்பது போதாது. வரவிருக்கும் அனைத்து விடுமுறைக் காலங்களுக்கும் இதேபோன்று கூடுதல் ரயில்கள் இயக்கப்பட வேண்டும். மேலும், அனைத்து ரயில்களிலும் குறைந்தது 10 கூடுதல் பெட்டிகள் இணைக்கப்பட வேண்டும் என மீண்டும் வலியுறுத்துகிறேன்.

பயணிகளின் பாதுகாப்பும் வசதியுமே மிகவும் அத்தியாவசியம், அவசியம், அவசரம் என்பதால் இதனை உடனடியாக நிறைவேற்ற ரயில்வே அமைச்சகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ரயில்வே அமைச்சகம் இந்த கோரிக்கைகளை உடனடியாக கவனத்தில் எடுத்து, தமிழ்நாட்டு பயணிகளுக்கு போதிய ரயில் வசதிகளை உறுதிபடுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜல்லடையான்பேட்டை கிளைக் கழக இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர்

எம்.கருணாநிதி (எ) நீதி - கே.ராஜலட்சுமி இணையரின் புதுமனை புகுவிழா!

முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்!

சென்னை, அக்.18-

சென்னை அசோக் நகர், புதூர் முன்னாள் தலைவர் நினைவில் வாழும் டி.மாரியப்பன் (பி.டி.சி.) - மோகனாம்பாள் ஆகியோரின் இளைய மகன் எம்.கருணாநிதி என்கிற நீதி - திருமதி கே.ராஜலட்சுமி இணையர் மேடவாக்கம் டாக்டர் அம்பேத்கர் நகர் சேரன் தெருவில் புதிதாகக் கட்டியுள்ள புதிய இல்லத்தின் புதுமனை புகுவிழா இன்று (18.10.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 7 மணி அளவில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முன்னாள் அமைச்சரும் சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளருமான மா. சுப்பிரமணியன் - திருமதி எஸ். காஞ்சனா சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு புதிய இல்லத்தினை திறந்து வைத்து வாழ்த்துகின்றனர்.

மேலும் இவ்விழாவில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், தாம்பரம் மேயர் திருமதி க. வசந்தகுமாரி, தாம்பரம் துணை மேயர் கோ. காமராஜ், சோழிங்கநல்லூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மத்திய பகுதி செயலாளர் எஸ்.அரவிந்த் ரமேஷ், மதுரவாயல் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், பகுதி கழகச் செயலாளர் காரப்பாக்கம் க. கணபதி, விருகம்பாக்கம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், தென் சென்னை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா மற்றும் மாநிலக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக செயலாளர்கள்,. ஒன்றியக் கழக செயலாளர்கள், சேர்மேன்கள், மாமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், வட்டம், கிளைக் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் தொ.மு.ச. நிர்வாகிகள், கழகத் தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

ஜல்லடியான்பேட்டை முன்னாள் கிளைக் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் மா. கருணாநிதி என்கிற நீதி - கே. ராஜலட்சுமி கருணாநிதி ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

பேரா.ஜி.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி. – எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. முன்னிலையில்

சென்னை வடக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் அறிவிப்பு!

சென்னை, அக். 18-

சென்னை வடக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம் 21.10.2026 புதன்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு மாவட்ட அவைத் தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையிலும், தலைமைக் கழகப் பிரதிநிதிகள் பேரா.ஜி.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., மற்றும் எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையிலும் இராயபுரம் அறிவகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் தவறாமல் பங்கேற்றுச் சிறப்பிக்குமாறு மாவட்ட பொறுப்பாளர்



ஆர்.டி.சேகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசு விழாவில் அதிகாரிகளை நிற்க வைத்து

த.வெ.க. மாவட்டச் செயலாளரை அமரவைத்த துணை சபாநாயகர்!

அவமதிப்பதாக அதிகாரிகள் புலம்பல்!

திருச்சி, அக். 18- அரசு சமுதாய வளை த.வெ.க., மாவட்ட செயதுறையூரில் நடந்த, காப்பு விழாவில், லரை அமர வைத்து, அதிகாரிகளை நிற்க வைத்து, குழு புகைப் படம் எடுத்த துணை சபாநாயகர் ரவிசங்கரின் செயல் அதிர்ச்சியை ஏற் படுத்தியுள்ளது.

திருச்சி மாவட்டம், துறையூரில் உள்ள ஆர்த்தி மஹாலில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகம் சார்பில், 100 கர்ப்பிணியருக்கான சமுதாய வளை காப்பு விழா நேற்று முன்தினம் காலை நடந்தது. சமுதாய வளை காப்பு விழாவில், துறையூர் தொகுதி த.வெ.க., எம்.எல்.ஏ.,வும், துணை சபாநாயகருமான ரவிசங்கர், குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் மலர்க்கொடி, தாசில்தார் சித்ரா, துணை தாசில்தார் ராமு, வட்டார அரசு டாக்டர் கள் மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் பங்கேற்றனர். அரசு விழாவான வளைகாப்பு நிகழ்ச்சி முடிந்ததும், கர்ப்பிணியர், அரசு அதிகாரிகள், துணை சபாநாயகர் ரவி சங்கருடன் குழு புகைப் படம் எடுத்துக் கொண்டனர்.

அப்போது, கர்ப்பிணியருக்கு நடுவே, இரு நாற்காலிகள் போடப்பட்டு, அதில் ஒன்றில் துணை சபாநாயகர் ரவிசங்கரும், மற்றொரு நாற்காலியில் த.வெ.க., மாவட்டச் செயலர் ஜெகன் மோகனும் அமர்ந்தனர்.

டாக்டர்கள், தாசில்தார், குழந்தைகள்திட்ட வளர்ச்சி அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகளை, நாற்காலிக்கு பின் நிற்க வைத்து, குழு புகைப்படம் எடுத்தனர்.

எந்த பதவியிலும் இல்லாத, ஆளுங்கட்சியை சேர்ந்த மாவட்டச் செயலரை அமர வைத்த துணை சபா நாயகர், அரசின் திட்டங்களை செயல்படுத்தும் அதிகாரிகளான எங்களை நிற்க வைத்து அவமதித்து விட்டார் என, புலம்பினர்.

இந்த புகைப்படம் வலைதளங்களில் பரவி விவாதமாகி உள்ளது.

தலைமைக் கழகப் பிரதிநிதிகள் பேரா.ஜெ.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி – எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெறுகிறது!

சென்னை வடகிழக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அறிவிப்பு!



சென்னை வடகிழக்கு மாவட்டம் செயற்குழுக் கூட்டம் 20.10.2026 செவ்வாய்க்கிழமை அன்று கீழ் குறிப்பிட்டுள்ள அட்டவணைப்படி லட்சுமிபுரத்தில் அமைந்துள்ள GPL திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

நாள்	நேரம்	தொகுதி
20.10.2026	காலை 10.00 மணிக்கு	மாதவரம் சட்டமன்ற தொகுதி
20.10.2026	காலை 11.00 மணிக்கு	திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி

மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையிலும், சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமைக் கழக பிரதிநிதிகள் பேரா.ஜெ.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி மற்றும் ஆஸ்டின் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற உள்ளது. மேலும் இந்நிகழ்ச்சியில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி M.P, மாநில மீனவர் அணி துணை அமைப்பாளர் கே.பி.சங்கர், ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

மேற்படி இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட, கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளிட்ட அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாதவரம் எஸ்.சுதர்சனம்
செயலாளர், சென்னை வட கிழக்கு மாவட்ட தி.மு.க.

சமூக வலைதளங்களில் வலம் வருவது!

